**2026 ஏப்ரல் மாதம் 29– ஆம் தேதி புதன்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**S.C. நெம்பர் : 32/2021**

| | | | |
|---|---|---|---|
| S.C. No: 32/2021 | பெயர்: செல்வக்குமார் த/பெ.குணசேகரன் | PW8 | 29.04.2026 |

(அரசு தரப்பில் M.P.No. 38/2026 மனு 29.04.2026 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் மனுவிற்கு ஆட்சேபனை செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டு, முதல் விசாரணை தொடர்ச்சி

1. என்னிடம் காட்டப்படும் எதிரி சக்திவேல் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அது **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது (எதிரிகள் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). அதில் என்னுடைய தந்தை குணசேகரன் கையொப்பமும் உள்ளது. எதிரி சக்திவேலும் கையொப்பம் செய்துள்ளார்.

**சாட்சி Crl.M.P.4556/2022 மனு 17.11.2022 ம் தேதி அனுமதிக்கப்பட்டதின்பேரில் அழைக்கப்பட்டு 1, 2, 9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

2. எனது தந்தை பெயர் குணசேகரன் என்றால் சரிதான். எனது தந்தை குணசேகரனின் தந்தை பெயர் ராமையாத்தேவர் என்றால் சரிதான். எதிரி செல்லப்பாண்டியின் தந்தை பெயர் பரமசிவம் என்றால் சரிதான். பரமசிவமும், எனது தாத்தா ராமையாத்தேவரும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். எனது சொந்த ஊர் மேலப்பட்டி என்றால் சரிதான். அந்த ஊர் கடமலைக்குண்டிலிருந்து தென்மேற்கே ஒரு கி.மீ. தூரத்தில் உள்ளது சரிதான். தங்கம்மாள்புரத்திற்கும் எங்கள் ஊருக்கும் இடையே 10 கி.மீ. தூரம்

இருக்கும் என்றால் சரிதான். கடமலைக்குண்டில் காவல்நிலையம் உள்ளது என்றால் சரிதான். கடமலைக்குண்டிலிருந்து வருஷநாடு தெற்கு பக்கம் 10 கி.மீ. தள்ளி உள்ளது என்றால் சரிதான்.

3. வருஷநாட்டிலிருந்து வடக்குப் புறமாக தங்கம்மாள்புரம் 2 கி.மீ. தூரத்தில் உள்ளது என்றால் 6, 7 கி.மீ. தூரத்தில் உள்ளது. கடமலைக்குண்டிலிருந்து வருஷநாடு செல்லும் சாலை தென்வடல்சாலை என்றால் சரிதான். சாலையின் இருபுறத்திலும் பேருந்து நிலையம் உள்ளது என்றால் சரிதான். பேருந்து நிலையத்திற்கு அருகில் தங்கராஜ், சுப்பிரமணி வீடு, போஸ் வீடு, கண்ணன் டீக்கடை, சந்திரன் தோட்டம் உள்ளது என்றால் ஞாபகமில்லை, பேருந்து நிலையம் அருகில் கடைகள், வீடுகள் உள்ளன, யாருடைய வீடுகள் என்று எனக்கு தெரியாது.

4. பேருந்து நிலையத்தில் எப்போதும் ஆட்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். நான் செல்லும்போது சுமார் எத்தனை நபர்கள் அங்கு இருந்தார்கள் என்றால் 7, 8 நபர்கள் இருந்தார்கள். நான் தங்கம்மாள்புரம் பேருந்து நிலையத்திற்கு செல்வதற்கு முன்பே காவலர்கள் அங்கு இருந்தார்கள் என்றால் இல்லை. தங்கம்மாள்புரத்தில் போலீசார் விசாரிக்கும் முன்பே நான் சென்றுவிட்டேன் என்றால் சரிதான். சக்திவேலை அதற்கு முன்பு நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். அதன் பின்னிட்டு சக்திவேலை எப்போது பார்த்தேன் என்றால் காவல்நிலையத்தில் வைத்து பார்த்தேன்.

5. காவல்நிலையத்தில் வைத்து அவரை விசாரித்து எழுதினார்களா என்றால் விசாரித்து தட்டச்சு செய்தார்கள். காவல்நிலையத்தில் யார் தட்டச்சு செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் காவல்நிலையத்தில்

வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எதிரிகளை எனக்கு தெரியாது என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சக்திவேலை தங்கம்மாள்புரம் பேருந்து நிலையத்தில் பார்த்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. எனது தந்தை அங்கு இல்லை என்றாலும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது முன்னர் சக்திவேல் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவ்வாறு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன செல்லப்பாண்டிக்கு பங்காளி உறவினர் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>3 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

7. நான் கையொப்பம் செய்த காலக்கட்டத்தில் கொரோனா ஊரடங்கு சமயம் என்றால் சரிதான். அந்த சமயத்தில் கிராம பகுதிகளுக்கு பேருந்துகள் செல்லவில்லை என்றால் சரியல்ல. காங்கேயம் திருப்பூர் மாவட்டத்தில் உள்ளது என்றால் சரிதான். அந்த மாவட்டத்திற்குண்டான பேருந்து போக்குவரத்து தடைசெய்யப்பட்டு இருந்தது என்றால் சரியல்ல, கட்டுப்பாடுகளுடன் பேருந்துகள் இயக்கப்பட்டு வந்தன. அந்த காலக்கட்டத்தில் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டு பேருந்தில் பயணம் செய்தார்கள் என்றால் சிலர் அணிந்திருந்தார்கள், சிலர் அணியாமல் பயணம் செய்தார்கள். எதிரியை போலீசார் காங்கேயத்திலிருந்து ஜீப்பில் அழைத்து வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் சக்திவேல் என் முன்பு ஒப்புதல் வாக்குமூலம்

கொடுக்கவில்லை என்றாலும், பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான்.

**4 முதல் 8 வரையிலான எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 3, 9 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை அப்படியே ஏற்றுக்கொள்கிறார்.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 29.04.2026 ம் தேதியன்று சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.04.29 18:15:42 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
29.04.2026